செய்தி வெளியீடு எண்: 828 நாள்: 13.11.2018

## செய்தி வெளியீடு

## சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை
## பெண் குழந்தைக்கான மாநில விருது அறிவிப்பு

தமிழக அரசு, சமூக நலம் சத்துணவு திட்டத் துறை மூலம், ''பெண் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கவும், அனைத்து பெண் குழந்தைகளும் 18 வயது வரை கல்வி கற்றலை உறுதி செய்யவும், பெண் குழந்தை தொழிலாளர் முறையை ஒழிக்கவும், பெண் குழந்தை திருமணங்களைத் தடுக்கவும், பாடுபட்டு வீரதீர செயல் புரிந்து வரும் 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளை சிறப்பிக்கும் விதமாக அதற்கான மாநில விருது ஒன்றை அறிவித்து அரசாணை பிறப்பித்து கடந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்படி வருடந்தோறும் மேற்குறிப்பிட்டவாறு சேவை புரிந்து வரும் சிறந்த குழந்தை ஒருவருக்கு தேசிய பெண் குழந்தை தினத்தில் (ஜனவரி 24) பாராட்டு பத்திரமும், ரூபாய் 1 இலட்சத்திற்கான காசோலையும் வழங்கி சிறப்பிக்கப்படுகிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தைச் சார்ந்த 10ஆம் வகுப்பு படிக்கும் செல்வி.ந.நந்தினி, என்ற சிறுமிக்கு, அவர் தனக்கு நடக்கவிருந்த குழந்தைத் திருமணத்தை துணிச்சலுடன் போராடி நிறுத்தியமைக்காக, கடந்த 24.01.2018 அன்று ஒரு இலட்ச ரூபாய்க்கான காசோலையும், பாராட்டு பத்திரமும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

அதே போன்று, வருகிற 24 ஜனவரி 2019 – தேசிய பெண் குழந்தை தினத்தில் மாநில விருது வழங்கிட 18 வயதிற்குட்பட்ட (31 டிசம்பர் 2018ன் படி) மேற்குறிப்பிட்டவாறு தகுதியான பெண் குழந்தைகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறுவதற்கு 30.11.2018 வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் இந்த அவகாசத்தை பயன்படுத்தி கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

விருதிற்கான விண்ணப்பங்கள் தலைமையாசிரியர் மற்றும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்/ மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்/ மாவட்ட திட்ட அலுவலர் (ஒகுவதி) / காவல்துறை / தொண்டு நிறுவனங்கள் போன்ற சம்மந்தப்பட்ட அலுவலர்கள் வாயிலாக உரிய முன் மொழிவுகளுடன் மாவட்ட சமூக நல அலுவலரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்விண்ணப்பங்கள் கூர்ந்தாய்வு செய்து, மாவட்ட ஆட்சியர் பரிந்துரையுடன் சமூக நல ஆணையரகத்திற்கு பரிசீலனைக்காக அனுப்பி வைக்கப்படும். மாவட்டங்களிலிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் மாநில அளவில் தேர்வு குழு மூலம் பரிசீலனை செய்யப்பட்டு, அனைத்து தகுதிகள் பெற்ற ஒரு பெண் குழந்தை தேர்வு செய்யப்பட்டு 24.01.2019 அன்று மாநில விருது வழங்கப்படும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**